**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் -2, பொள்ளாச்சி.**

**முன்னிலை திரு.E.பிரகாசம், பி.ஏ., பி.எல்.,**

**நீதித்துறை நடுவர் எண்-2, பொள்ளாச்சி.**

**2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**பட்டிகை விசாரணை வழக்கு எண்.389/2023**

**(CNR NO : TNCB120024632023)**

தமிழ்நாடு அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,
பொள்ளாச்சி தாலுக்கா காவல் நிலையம்,
காவல் நிலைய குற்ற எண்.16/2023 ... குற்றமுறையிடுபவர்

// எதிர் //

1. மதன்பிரகாஷ் (19/2023),
த/பெ. சின்னதுரை,
ஈஸ்வரன் கோவில் தெரு,
ஜமீன்ஊத்துக்குளி,
பொள்ளாச்சி.

2. வெங்கட்ரமணி (19/2023),
த/பெ. சரவணன்,
கலைஞர் நகர்,
ஜமீன்ஊத்துக்குளி,
பொள்ளாச்சி.

3. அஜய்குமார் (19/2023),
த/பெ. சரவணன்,
13 மாரியம்மன் கோவில் தெரு,
ஜமீன்ஊத்துக்குளி,
பொள்ளாச்சி. ...எதிரிகள்

இவ்வழக்கானது கடந்த 06.07.2023 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரிகளுக்காக வழக்கறிஞர் திரு.A. அன்வர்பாட்சா B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இந்த வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்,

**//தீர்ப்புரை//**

**<u>1. குற்ற இறுதி அறிக்கை சுருக்கம்</u>**

கடந்த 24.12.2022 ம் தேதி 17.00 மணிக்கு பொள்ளாச்சி தாலுக்கா காவல்நிலைய சரக எல்லைக்குட்பட்ட டி.நல்லிக்கவுண்டன்பாளையம் - வடுகபாளையம் ரோடு, ரமேஷ் தோட்டம் அருகே மேய்ந்து கொண்டிருந்த ஒரு ஆட்டை எதிரிகள் மூவரும் தங்களது சுயலாபகம் கருதி திருடிச் சென்றதாக தெரிவித்து எதிரிகள் மீது இ.த.ச. 1860 சட்டப்பிரிவு 379 of IPC -ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் செய்துள்ளார் என்று பொள்ளாச்சி தாலுக்கா காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>2. அரசு தரப்பு வழக்கின் சராரம்சம் பின்வருமாறு,</u>**

மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் கண்டுள்ள வழக்கு சம்பவம் சம்பந்தமாக கடந்த 19.01.2023 ம் தேதி பொள்ளாச்சி தாலுக்கா காவல்நிலையத்தில், காவல் உதவி ஆய்வாளர் தெய்வேந்திரன் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது அ.சா.1 நிலையம் ஆஜராகி **அ.சா.ஆ.3** புகாரைக் கொடுத்துள்ளார். புகாரில் உள்ள சாட்சிக் கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் புகாரைப் பெற்ற மேற்படி காவல் உதவி ஆய்வாளர் புகாரின் அடிப்படையில் **அ.சா.ஆ.4** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு **அ.சா.ஆ.5** பார்வை மகசர் மற்றும் **அ.சா.ஆ.6** மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் வஞ்சியாபுரம் பிரிவில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது TN 99 S 3394 என்ற வாகனத்தில் வந்தவர்களை பிடித்து விசாரிக்கையில் அவர்கள் தாமாக வந்த அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின்அடிப்படையில் மேற்படி எதிரிகளை கைது செய்து ஒப்புதல்

வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ. 7** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எதிரிகளை நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தி, வழக்குச் சொத்தான ஆட்டை **அ.சா.ஆ.8** படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து தனது புலன்விசாரணை முடித்து எதிரிகள் மீது இ.த.ச. 1860 சட்டப்பிரிவு 379 of IPC -ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக அரசு தரப்பு வழக்கு. மேற்படி வழக்குச் சொத்தான ஆட்டின் புகைப்படங்கள் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>3. வழக்கு நகல்கள் குவிமுச பிரிவு 207-ன் கீழ் வழங்கப்பட்டது</u>**

இந்த வழக்கு 06.07.2023-அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகள் ஆஜரானதும் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

**<u>4. எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(1)(அ)-ன் கீழ் குற்றம் வினவி கேட்கப்பட்டது</u>**

அரசு தரப்பு ஆவணங்களை பரிசீலித்து பின்னர் இந்நீதிமன்றத்தால் விசாரணை செய்தும் தண்டிக்க கூடியதுமான குற்றம் புரிந்திருப்பதாக அனுமானிக்க போதிய காரணங்கள் இருந்தபடியால், இரண்டு எதிரிகள் மீது இ.த.ச. 1860 சட்டப்பிரிவு 379 of IPC -ன் கீழ் **குற்றச்சாட்டுகள் விளக்கிக்கூறி வினவியபோது,** எதிரிகள் குற்றத்தை மறுத்தனர். ஆகவே அரசுத் தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**<u>5. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றவணங்களின் விவரம்</u>**

அரசு தரப்பில் **அ.சா.01 முதல் அ.சா.02 வரையான சாட்சிகள்** விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.01 முதல் அ.சா.ஆ.08 வரையிலான ஆவணங்கள்** குறியீடு செய்யப்பட்டு உள்ளது. எதிரி தரப்பில் சாட்சி, சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**<u>6. எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் குற்றம் வினவி கேட்கப்பட்டது</u>**

அரசுத்தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்கள் குறித்து **கு.வி.மு.ச.பிரிவு.313(1)(ஆ)-ன் கீழ் வினவியபோது,** எதிரிகள்

பொய் சாட்சி என்றும், இந்த வழக்கு பற்றி பொதுவாக ஏதாவது கூற வேண்டுமா? என்று வினவிய போது பொய் வழக்கு என்றும், தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினர். எதிரிள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்று கூறியதன் பேரில் எதிரிகள் தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>7. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u>**

1) எதிரிகளுக்கு எதிரான இ.த.ச. 1860 சட்டப்பிரிவு 379 of IPC -ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

இவ்வழக்கில் புகார்தாரர், தனது புகாரில், கடந்த 24.12.2022 ம் தேதி மாலை 05.00 மணியளவில் டி. நல்லிக்கவுண்டன்பாளையம் - வடுகபாளையம் செல்லும் ரோட்டில் ரமேஷ் கவுண்டர் தோட்டம் அருகில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தேன். அப்போது மற்ற ஆடுகள் எல்லாம் பக்கத்து காட்டில் மேய்வதற்காக ஓடிக் கொண்டிருந்தது. நான்கு ஆடுகள் மட்டும் அதே இடத்தில் மேய்ந்து கொண்டிருந்தது. ஓடிய ஆடுகளை பார்த்துவிட்டு திரும்ப வந்து நான்கு ஆடுகளைப் பார்த்தபோது மூன்று ஆடுகள் மட்டும் மேய்ந்துகொண்டிருந்தது. அதில் ஒரு ஆடு மட்டும் காணவில்லை. யாரோ ஆட்டை திருடிச் சென்றுவிட்டார்கள் என்று புகார் அளித்துள்ளார்.

மேற்படி புகாரை பெற்ற பொள்ளாச்சி தாலுக்கா காவல்நிலைய காவல்துறையினர் புகாரின் அடிப்படையில் பொள்ளாச்சி தாலுக்கா காவல்நிலைய குற்ற எண் 16/2023 ன் கீழ் இ.த.ச 1860 சட்டபிரிவு 379 of IPC -ன் கீழ் வழக்கு பதிவு செய்து பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரி மீது இ.த.ச 1860 சட்டபிரிவு 379 of IPC -ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.

**<u>8.தீர்வுக்கான காரணங்கள் மற்றும் விளக்கங்கள்</u>**

இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.2 வரையான சாட்சியங்களும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையான சான்றாவணங்களும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வழக்கில் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 தனது முதல் விசாரணையில், நான் தற்போது நல்லூரியில் குடியிருந்து கொண்டு ஆடு மேய்க்கும் வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை. சுமார் 3 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் ஆடு களவு போனது குறித்து நான் புகார் அளித்திருந்தேன். தற்போது என்முன் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1** ஆகும். புகாரை நான் எழுதவில்லை. புகாரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. தற்போது என்முன் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள ஆடுகள் தான் களவுபோன ஆடுகள் ஆகும். அந்த புகைப்படங்கள் (3 **எண்ணிக்கைகள்**) முறையே **அ.சா.ஆ.2** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி அ.சா.1ன் சாட்சியத்தினை ஆராய்ந்து பார்க்கும்போது, அவர் புகாரை எழுதவில்லை என்பதும் புகாரில் என்ன எழுதியிருந்தது என்பதும் அவருக்கு தெரியாது என்பதும் தெளிவாக தெரிகிறது. மேலும் அவர் எதிரிகள் வழக்குச் சொத்தான ஆடை திருடிச் சென்றதாக குறிப்பிட்டு சாட்சியம் எதுவும் அளிக்காத சூழ்நிலையில் அ.சா.1ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கினை நிரூபணம் செய்யப் போதுமானதாக இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

இவ்வழக்கில் அ.சா.2, இவ்வழக்கினை புலன்விசாரணை செய்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த புலன்விசாரணை அதிகாரிக்கு பதிலாக சாட்சியம் அளித்த ஆவணசார் சாட்சி ஆவார்.

இந்நிலையில், இவ்வழக்கில் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 வழக்கு சம்பவ சமயத்தில் எதிரிகள் தான், சம்பவத்தில் ஈடுபட்டு வழக்கு சொத்தான ஆட்டை திருடிச் சென்றதாக குறிப்பிட்டு சாட்சியம் ஏதும் அளிக்காத சூழ்நிலையில் இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரிக்கு பதிலாக சாட்சியம் அளித்த ஆவணசார் சாட்சியான அ.சா.02 ன் சாட்சியத்தினை மட்டுமே வைத்து எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இத.ச. 1860 சட்டப்பிரிவு 379 of IPC-ன் கீழான இவ்வழக்கை அரசுதரப்பில் ஐயம் திரிபுர நிரூபணம் செய்ய இயலாது என்று இந்நீதிமன்றம் கருதி ஐயத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரிகளை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**9. முடிவாக,**

எதிரிகளுக்கு எதிராக சாட்டப்பட்ட இ.த.ச. 1860 சட்டப்பிரிவு 380 of IPC -ன் கீழான குற்றச்சாட்டு பொறுத்து குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1) - ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**10.வழக்கு சொத்து**

இவ்வழக்கில் 100/2023 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட ஆடு ஒன்றை இந்நீதிமன்றக் குற்றப்பலவகை மனு எண் 444/2023 ன் கீழ் 06.03.2023 ம் தேதியிட்ட உத்தரவின் பேரில் ஏற்கனவே அதன் உரிமையாளரிடம் இடைக்கால பொருப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளதை அவரே நிரந்தரமாக வைத்துக் கொள்ளவும், அதற்காக அவர் எழுதிக் கொடுத்த பிணைப்பத்திரத்தை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு பின்னர் அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ம் நாள் என்னால் இந்நீதிமன்றம் அவையறிய பகரப்பட்டது.

**ஒ/ம். E. பிரகாசம் B.A., B.L.,**
**நீதித்துறை நடுவர் எண்-2,**
**பொள்ளாச்சி.**

**11. அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| **அ.சா.1** | ஆறுமுகம் |
| **அ.சா.2** | ஸ்டீபன் - காவல் உதவி ஆய்வாளர் |

**12. அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| **அ.சா.ஆ.1** | புகாரில் உள்ள சாட்சிக் கையொப்பம் |
| **அ.சா.ஆ.2** | வழக்குச் சொத்தான ஆட்டின் புகைப்படம் |
| **அ.சா.ஆ.3** | புகார் |
| **அ.சா.ஆ.4** | முதல் தகவல் அறிக்கை |

| | |
|---|---|
| **அ.சா.ஆ.5** | பார்வை மகசர் |
| **அ.சா.ஆ.6** | மாதிரி வரைபடம் |
| **அ.சா.ஆ.7** | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி |
| **அ.சா.ஆ.8** | படிவம் 91 |

**13. அரசுதரப்பு சான்று பொருள்: -** இல்லை

**14. எதிரி தரப்பு சாட்சி சான்றாவணம் மற்றும் சான்றுபொருள்:** இல்லை

**15. குறிப்பு:**

1. வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைத்து விசாரிக்கப்படவில்லை.
3. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்து வந்தனர்.

**ஒ/ம். E. பிரகாசம் B.A., B.L.,**

**நீதித்துறை நடுவர் எண்-2,**

**பொள்ளாச்சி.**

**//உண்மை நகல்//**

PRAKASAM ELANGOVAN

Digitally signed by PRAKASAM ELANGOVAN
Date: 2026.03.06 12:22:14 +05'30'

**நீதித்துறை நடுவர் எண்-2,**

**பொள்ளாச்சி.**

**நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது**

மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,

கோயம்புத்தூர் மாவட்டம்.